2018 ஜூன் 5]

122—

நியாய விலைக் கடைக்கு கட்டடம்

***8564—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, 70–வது வார்டு, பெரம்பூர் நெடுஞ்சாலை மற்றும் அருந்ததியர் நகரில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதியிலே 70–வது வார்டு, பெரம்பூர் பயன்பெறுவோர் கூட்டுறவு பண்டக சாலை என்ற பெயரில் பெரம்பூர் ஜமாலியா மெயின் சாலையில் இரண்டு நியாய விலைக் கடைகள், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் முறையே 1,217 மற்றும் 1,332 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தேர்வு செய்து கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று இந்த இரு நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தக் கட்டடங்கள் இல்லாத நியாய விலைக் கடைகளுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் பல்வேறு அரசுத் திட்டங்கள்மூலம் சொந்தக் கட்டடங்கள் கட்டி அதில் நியாய விலைக் கடைகளை உருவாக்கிய பெருமைக்குரிய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் என் வணக்கம்.*

[2018 ஜூன் 5

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, 70–வது வார்டு, பெரம்பூர் நெடுஞ்சாலை, அருந்ததியர் நகரில் இரண்டு நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. கடை எண் 13 மற்றும் கடை எண் 14 ஆகியவற்றில் ஏறக்குறைய 2,500–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இரு கடைகளும் சரிவர இயங்கி வருவதாகச் சொன்னார்கள். ஆனால், ஒரு கடைக்கே கிட்டத்தட்ட 600 சதுர அடி இடம் தேவைப்படுகின்ற சூழ்நிலையில், அந்த இரு கடைகளுமே 800 சதுர அடியில் இயங்கி வருகின்ற ஒரு சிரமமான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்த இரு கடைகளுமே கிட்டத்தட்ட 20 வருடங்களாக பெரம்பூர் நெடுஞ்சாலை எண் 27–ல் இயங்கி வந்தன. அதன் பிறகு அந்தக் கட்டட உரிமையாளர் அந்த இடம் தன்னுடைய பயன்பாட்டிற்குத் தேவைப்படுவதாக சொல்லி நீதிமன்றத்திற்குச் செல்ல, நீதிமன்ற ஆணையை ஏற்று, அந்தக் கடை அங்கிருந்து காலி செய்யப்பட்டு, அதே பெரம்பூர் நெடுஞ்சாலை எண் 12–ல் சிறிது நாட்கள் இயங்கின. மீண்டும் அந்த முகவரியிலிருந்து மாற்றப்பட்டு, எண் 96, பெரம்பூர் நெடுஞ்சாலையில் அந்த இரு கடைகளும் இயங்கி வந்த நிலையில், அந்த இடத்திலும் இடம் போதுமானதாக இல்லாத சூழ்நிலையில் அங்கிருந்து கடை எண் 14 மட்டும் பெரம்பூர் நெடுஞ்சாலை எண் 9/2 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டு, அங்கும் சில காலம் இயங்கி வந்து, மீண்டும் அந்த இரு கடைகளுமே பெரம்பூர் நெடுஞ்சாலை எண் 46–ல் தற்போது இயங்கி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போலவே, பொதுமக்கள் அங்கு வந்து செல்ல சிரமப்படுகிறார்கள். மிகவும் பழைய கட்டடத்தில் அந்தக் கடைகள் இயங்கி வருவதால் மழை பெய்தால் அந்தக் கட்டடத்தில் ஈரப்பதம் ஏற்பட்டு, அங்கிருக்கின்ற உணவுப்பொருட்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை உள்ளது. அதுமட்டுமல்ல அந்தக் கட்டடத்தில் ஆங்காங்கே எலிகள் வந்து செல்கின்ற அளவிற்கு சந்துகள் இருக்கின்ற காரணத்தினால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

2018 ஜூன் 5]

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப்பொருட்கள் எல்லாம் அடிக்கடி வீணாகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை கருத்தில்கொண்டு அங்கு வந்து செல்கின்ற பொதுமக்களின் பயனுக்கேற்றவாறு அந்தக் கடைகளுக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தருமாறு நான் என்னுடைய வினாவை எழுப்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் இருந்தால் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அந்த வட்டத்தில் இரண்டு இடங்கள் தயாராக இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அனுப்புகின்றபட்சத்தில், நான் அதிகாரிகளை அழைத்துச் சென்று, அந்த இரண்டு இடங்களையும் அடையாளம் காட்டத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தேர்வு செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக அந்தப் பண்டக சாலையை பொறுத்தளவிற்கு தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகிறது. அந்தச் சங்கம் ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இயங்குகிறது. அந்த பெரம்பூர் பயன்பெறுவோர் கூட்டுறவு பண்டக சாலையின்கீழ் இரண்டு நியாய விலைக் கடைகள் மட்டுமே நடத்தப்படுகின்றன. வேறு எந்த ஒரு* business*–ம் இல்லை. கட்டுப்பாடற்றப் பொருட்கள், கட்டுப்பாடுள்ள பொருட்களை விற்பது மட்டுமே அந்தச் சங்கத்தினுடைய நோக்கமாக இருக்கிறது. மாநகராட்சி இடத்தில் இயங்கிவரும் அந்த இரு கடைகளுக்கும் ஏறத்தாழ 4,050 ரூபாய் வாடகையாகக் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் அங்கு வந்து செல்வதற்கு சிரமப்படுவதாகத் தெரிவித்தார். அந்த இடத்திற்கு மக்கள் தங்குதடையின்றி வந்து பொருட்களை வாங்கிச் செல்கிறார்கள். எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இடம் பார்த்துக் கொடுக்கும்பட்சத்தில், நிதி வழங்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று இந்த ஆண்டே நிச்சயமாக கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, ஏறத்தாழ 1,838 ரேஷன் கடைகளுக்குக் கட்டடங்கள்*

[2018 ஜூன் 5

கட்டிக்கொடுத்திருக்கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமும், பல்வேறு அரசுத் திட்டங்களின் மூலமும் பல ஆயிரக்கணக்கான கடைகளுக்கு சொந்தமாகக் கட்டடங்களைக் கட்டித் தந்து, அதிலே நியாய விலைக் கடைகளை இயங்க வைத்த பெருமைக்குரிய ஆட்சியை செய்தவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அனுப்பினால் அந்த இரண்டு இடங்களையும் காண்பிக்க நான் தயாராக இருக்கிறேன். அந்த இடத்திலே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்றைக்கு வர வேண்டும் என்று சொன்னால் உடனடியாக அதிகாரிகளுக்குத் தகவல் சொல்லி, அவர்களை அனுப்ப மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் துறை அலுவலகங்களும், சொந்தக் கட்டடத்தில், இயங்க வேண்டும் என்கின்ற ஒரு கொள்கை முடிவினை எடுத்து, அதன்படி அனைத்து அரசு சார்ந்த அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டத் தேவையான நிதியினை வழங்கி,

2018 ஜூன் 5]

அனைத்துத் துறைகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கு ஏதுவாக அரசாணை பிறப்பித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று வழி நடத்திச் சென்று கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தெற்கு தொகுதி, 9–வது கோட்டம், அகரமகால் தெருவில் இருக்கின்ற நியாய விலைக் கடை, ஒரு சிறிய இடத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அங்கே 2,000–க்கும் மேற்பட்ட பயனாளிகள் அரசு சார்பில் வழங்கப்படுகின்ற பொருட்களை வாங்க அந்த நியாய விலைக் கடைக்கு வரும்போது மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். அதுமட்டுமல்லாமல் வெயில் காலங்களிலும், மழைக் காலங்களிலும், அந்தக் கடைக்கு வருகின்ற பயனாளிகள் எல்லாம் கோடை வெயில் தாக்கத்திலும், மழையிலும் நனைந்து மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். அந்தக் கடையை இரண்டாகப் பிரித்து, கே.பி. கரடு, வடபுறம், தென்புறம் ஆகிய இடங்களில் இருக்கின்ற மக்கள் பயன்பெறும் வகையில் அந்த கே.பி. கரடு என்கின்ற கலியபெருமாள் கரடு அருகில் ஒரு நியாய விலைக் கடையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு தாய்க் கடையிலிருந்து, குடும்ப அட்டைகளைப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடையாக அமைக்க வேண்டுமென்றால், தாய்க் கடைக்கும், பகுதி நேர நியாய விலைக் கடைக்கும் உள்ள இடைவெளி குறைந்தது 1½ கிலோ மீட்டர் தூரமாவது இருக்க வேண்டும். மலைப் பிரதேசமாக இருந்தால் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 150 கார்டுகள் இருக்க வேண்டும். தாய்க் கடையில்*

500 கார்டுகள் இருக்க வேண்டும். அதே நகர்ப்புறமாக இருந்தால் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்று அரசு விதி இருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2,000 கார்டுகளுக்கு மேல் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்திவேல் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, துறை ரீதியாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில் இருக்கின்ற மாநகராட்சியினுடைய 65–வது வார்டில் செல்வபுரம் என்ற பகுதியுள்ளது. அந்தக் கடை பிரிக்கப்பட்ட பிறகு, அந்தக் கடையில் 800–க்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ளன. அந்தக் கடைக்குச் சொந்தக் கட்டடம் தேவை என்ற கோரிக்கையினை வைக்க விரும்புகிறேன். திருவெறும்பூர் தொகுதி, கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சியில் இருக்கின்ற மேலகுமரேசபுரம் என்ற பகுதியில் இடிகின்ற நிலையில் ஒரு நியாய விலைக் கடை உள்ளது. அதேபோன்று மாநகராட்சிப் பகுதியில் இருக்கின்ற மேலகல்கண்டார்கோட்டையில் இருக்கின்ற கடை எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்ற நிலையில் இருக்கின்றது. எனவே, இடிந்து விழும் நிலையில் இருக்கக்கூடிய மேற்சொன்ன கட்டடங்களை demolish செய்துவிட்டு புதிதாக கட்டடங்களைக் கட்டித் தர முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று தாய்க் கடையை இரண்டு கடைகளாகப் பிரித்துக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கோரும் கட்டடம் மிகவும் பழுதடைந்திருப்பதால், அதனை demolish

2018 ஜூன் 5]

செய்துவிட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக, நியாய விலைக் கடைக்கு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி முகமை நிதியிலிருந்தோதான் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுவது வழக்கம். இல்லையென்றால் அந்தப் பகுதியில் இருக்கின்ற பணக்காரர்கள், தாங்களாகவே முன்வந்து நியாய விலைக் கடைக்கு இடத்தை தானமாக எழுதிக் கொடுத்தால் அதுவும் வரவேற்கக்கூடியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கோரிக்கையை சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாக, துறை ரீதியான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

துணை மின் நிலையம்

***18599—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி கிராமத்தில் 110 K.V. துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி பகுதியில் 110 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் கேட்டிருக்கின்றார். அந்த அளவிற்கு மின் பளு அங்கு இல்லை. இப்போது புதிதாக 33/11 K.V. திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது